Australian Government
Department of Home Affairs

# Privacy notice
# தகவல் பாதுகாப்பு அறிவிப்பு

Form
1442i TAM
TAMIL

Department of Home Affairs (‘உள்நாட்டு விவகாரத் திணைக்களம்’ (திணைக்களம்)) என்பது ‘அவுஸ்திரேலிய எல்லைப் படை’ யையும் உள்ளடக்கியதாகும். தனிநபர் ஒருவரைப் பற்றிய தகவல்களை திணைக்களம் சேகரிக்கும்போது குறிப்பிட்ட சில விடயங்களை அந்த நபருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று The *Privacy Act 1988* (Privacy Act) (*தகவல் பாதுகாப்பு சட்டம் 1988* (தகவல் பாதுகாப்பு சட்டம்)) திணைக்களத்தினை வேண்டுகிறது. இப்படிவமானது அந்த விடயங்களை உங்களுக்குத் தெரியப்படுத்தும் அறிவிப்பாகும்.

## ஒருவரைப் பற்றிய தனிநபர் தகவல்கள் என்றால் என்ன?

தனிநபர் ஒருவரது அடையாளத்தை நியாயமான முறையில் உறுதிப்படுத்தவல்ல தகவல்கள் அல்லது கருத்து அபிப்பிராயம ‘தனிநபர் குறித்த தகவல்கள்’ (personal information) எனப்படும் என்று ‘தகவல் பாதுகாப்பு சட்டம்’ சொல்கிறது.

‘தகவல் பாதுகாப்பு சட்ட’த்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தனிநபர் ஒருவரைப் பற்றிய சில குறிப்பிட்ட உணர்வார்ந்த தகவல்களையும் திணைக்களம் திரட்டும், மற்றும் இதில் தனிநபர் ஒருவரது இனப் பூர்வீகம், பாலியல் நாட்டம் அல்லது பாலியல் நடவடிக்கைகள், குற்றப் பதிவுகள், உடல்நலத் தகவல்கள் மற்றும் அங்க அடையாளங்கள், தொழில்சார் அல்லது தொழிலாளர் சங்கத் தொடர்புகள், மத நம்பிக்கைகள் அல்லது சேர்க்கைகள், தத்துவார்த்த நம்பிக்கைகள் மற்றும் அரசியல் அமைப்புக்களில் உள்ள அங்கத்துவம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்கள் இதில் அடங்கும்.

The *Migration Act 1958* (the Migration Act) (*புலப்பெயர்வு சட்டம் 1958*) (‘புலப்பெயர்வு சட்டம்’)), the *Customs Act 1901* (வாந ஊரளவழஅள யுஉவ) (*சுங்கவரி சட்டம் 1901* (சுங்கவரி சட்டம்)), the *Immigration (Guardianship of Children) Act 1946* (the IGOC Act) (*குடிவரவு (குழந்தைகள் பாதுகாவல்) சட்டம் 1946* (IGOC சட்டம்)), the *Excise Act 1901* (வாந நுஓஉஙைந யுஉவ) (*தீர்வை சட்டம் 1901* தீர்வை சட்டம்)), the *Australian Border Force Act 2015* (the Border Force Act) (*அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு சட்டம் 2015*) (எல்லைப் பாதுகாப்பு சட்டம்), the *Maritime Powers Act 2013* (the Maritime Powers Act) (*கடல்மார்க்க அதிகாரங்கள் சட்டம் 2013* (கடல்மார்க்க அதிகார சட்டம்)) மற்றும் the *Australian Citizenship Act 2007* (the Citizenship Act) (*அவுஸ்திரேலிய பிரசாவுரிமை சட்டம் 2007* (அவுஸ்திரேலிய பிரசாவுரிமை சட்டம்)) ஆகியவை ‘திணைக்கள’த்தினால் நிர்வகிக்கப்படும் பிரதான சட்டங்களாகும்.

## தனிநபர் அடையாளங்காட்டிகள்

அங்க அடையாளங்கள் (தனிநபர் அடையாளங்காட்டிகள் என்றும் இவை அழைக்கப்படும்) ஆகியவற்றைப் போன்ற உணர்வார்ந்த தகவல்களை உள்ளடக்கிய உங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டுதல் பயன்படுத்துதல் மற்றும்/ அல்லது வெளிப்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை ‘புலப்பெயர்வு மற்றும் பிரசாவுரிமை சட்ட’ங்கள் உள்ளடக்கியுள்ளன.

‘தனிநபர் அடையாளம் காட்டி’களில் பின்வருவன உள்ளடங்கும் என்று சட்டம் விளக்குகிறது:

- விரல் ரேகைகள் அல்லது கை ரேகைகள்
- முகம் மற்றும் தோள்களைக் காட்டும் படம்
- ஒலி அல்லது காணொளிப் பதிவு (வரையறுக்கப்பட்ட சில விதிவிலக்குகளுடன் ‘புலப்பெயர்வு சட்டம்’ சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்கு மட்டும்)
- உயரம் மற்றும் எடை ஆகியவற்றின் அளவு
- ‘கருவிழி’ (iris)-யின் படம்
- நபர் ஒருவரது கையொப்பம், அல்லது
- விதிமுறைகளில் சொல்லப்பட்டுள்ள வேறு ‘அடையாளம் காட்டி’ எதுவும்.

கீழ் வரும் தனிநபர்களது அங்க அடையாளங்கள் (தனிநபர் அடையாளங்காட்டிகள்) திரட்டப்படும் மற்றும்/அல்லது சரிபார்க்கப்படும்:

- பயணம் செய்யும்போது விமான நிலையங்களில்
- கரை சேர்ந்த பிறகு விசாவிற்காக விண்ணப்பிப்பவர்கள் (பாதுகாப்பு விசாவுக்கு விண்ணப்பவர் உட்பட)
- அவுஸ்திரேலிய சமூகத்தில் பிரசையாக இல்லாதோர்
- குடிவரவுத் தடுப்பில் இருப்போர்
- அவுஸ்திரேலிய பிரசாவுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள்.

## திணைக்களத்தின் செயல்கள் மற்றும் எமது தொடர்பு விபரங்கள்

கீழ்வரும் விடயங்களுக்கு பங்களிப்பு செய்து அவற்றை உறுதிப்படுத்தி அவுஸ்திரேலியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதும், அவுஸ்திரேலியாவின் எல்லையைக் கடக்கும் ஆட்கள் மற்றும் சரக்குகள் ஆகியவற்றை நிர்வகிப்பதும் திணைக்களத்தின் இலட்சியமாகும்:

- கட்டுப்படுத்தப்பட்ட புலப்பெயர்வு மூலம் நிர்வகிக்கப்படும் அவுஸ்திரேலியாவினது எதிர்காலம்
- அகதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் சர்வதேச ரீதியில் மனிதாபிமான கொள்கைத் திட்டங்களுக்குப் பங்களிப்பு
- எல்லைக் கட்டுப்பாடு மற்றும் பயணியர் வசதி மூலமாக அவுஸ்திரேலியாவினது பாதுகாப்பு
- சுங்க வருவாய் மற்றும் வர்த்தகப் புள்ளிவிவர சேகரிப்பு
- சட்டரீதியான வர்த்தகத்திற்கான வசதியளிப்பு
- அவுஸ்திரேலியாவினது கடல்மார்க்கப் பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஆர்வங்கள்
- அவுஸ்திரேலியாவினது குடிவரவு சட்டங்களைப் பின்பற்றியொழுகல் மற்றும் குடிவரவு குறித்த முடிவெடுப்புகளில் நேர்மை
- அவுஸ்திரேலிய பிரசாவுரிமை சட்ட நிர்வாகம்.

திணைக்களத்தினது வலைத்தளமான – **www.homeaffairs.gov.au** -இல் முழு தொடர்பு விபரங்களைக் காணலாம்

உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் தவறான முறையில் சேகரித்திருக்கிறோம் அல்லது பயன்படுத்தியிருக்கிறோம் என்று நீங்கள் கருதினால்:

- **www.homeaffairs.gov.au/feedback** எனும் வலைத்தளம் வாயிலாக கருத்துரைப்புப் படிவம் ஒன்றை நிரப்புங்கள்
- பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்:
  The Manager
  Global Feedback Unit
  GPO Box 241
  Melbourne VIC 3001
  Australia

## உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை திணைக்களம் யாரிடமிருந்து சேகரிக்கும்

பொதுவாக, திணைக்களம் (அல்லது திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டுள்ள சேவை வழங்குநர்கள்) உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களை உங்களிடமிருந்து நேரடியாக சேகரிப்பார்கள். உங்கள் சார்பாக செயல்பட உங்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரிடமிருந்து, அல்லது 'புலப்பெயர்வு சட்ட'த்தின் கீழ் சொல்லப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள முறைமையிடமிருந்து உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் சேகரிப்போம். ஸ்மார்ட்-கேட்' மற்றும் இதர தானியங்கி எல்லைக் கடப்பு முறைமைகள் ஆகியன அதிகாரமளிக்கப்பட்டுள்ள முறைமைகளில் உள்ளடங்கும். இதர அவுஸ்திரேலிய அரசு முகமைகள், சட்ட அமலாக்க முகமைகள், வெளிநாட்டு அரசுகள், பொறுப்பாதரவாளர்கள் (ஸ்ழளெழசள), மருத்துவத் தொழிலர்கள், நீங்கள் பெயர்குறிப்பிட்டுள்ள அமைப்புகள், கல்வி வழங்குநர்கள், பணியமர்த்துநர்கள் மற்றும் தகவல்களைக் கொடுப்பதற்காகத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் (உதாரணமாக. 'ஙழடி-ைை உயடடள') ஆகியோரை உள்ளடக்கக்கூடிய மூன்றாம் தரப்பினரிடமிருந்தும் நாங்கள் உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கக்கூடும்.

### குடிவரவு சேவைகளை ஆற்றும் முகமைகள் அல்லது ஒப்பந்ததாரர்கள்

திணைக்களத்தினது சில பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள இதர அரச முகமைகளினால் எமது சார்பாக தனிநபர் குறித்த தனிப்பட்ட தகவல்கள் சில சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

எமது சார்பாக ஒப்பந்ததாரர்களாலும் ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. புறப்பாட்டுப் பயணிகள் மற்றும் உள்வரவுப் பயணிகள் ஆகியோருக்காக வான்வழி நிறுவனங்களால் செய்யப்படும் பிரயாணிகள் முன் பதிவு செயல்முறைகள், கணினி முறைமைகள், ஆராய்ச்சிகள் சம்பந்தபட்ட மதிப்பாய்வுகள்/நேர்காணல்கள், குடிவரவுத் தடுப்பில் உள்ளோருக்கான ஆதரவு சேவைகள் மற்றும் மருத்துவ சேவைகள் ஆகியன உதாரணங்களில் உள்ளடங்கும்.

அவுஸ்திரேலியாவில் இருந்தாலும் அல்லது வெளிநாடுகளில் இருந்தாலும், திணைக்களத்தினால் அமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களும் தகவல் பாதுகாப்பு சட்டத்திற்கு இணங்க நடக்க வேண்டுமென திணைக்களம் வேண்டுகிறது.

## சட்டத்தால் வேண்டப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் பொழுது உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை சேகரித்தல்

'புலப்பெயர்வு சட்டம்', 'IGOC சட்டம்', 'சுங்கவரி சட்டம;', 'தீர்வை சட்டம்', 'கடல்மார்க்க அதிகார சட்டம்', 'குடியுரிமை சட்டம்' மற்றும் 'தகவல் பாதுகாப்பு சட்டம்' ஆகிய சட்டங்களை நிர்வகிக்கும் பொருட்டு ஒருவரைப் பற்றிய குறிப்பான சில தனிப்பட்ட தகவல்களை சேகரிக்குமாறு திணைக்களத்திற்கு இச்சட்டங்கள் அதிகாரம் அளிக்கின்றன, மற்றும் சில தருணங்களில் திணைக்களத்தினை இப்படிச் செய்யுமாறு வேண்டுகின்றன.

### 'புலப்பெயர்வு சட்டம்'

விசாவிற்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரை:

- விண்ணப்பத்திற்குத் தேவைப்படும் எவ்வொரு தகவலையும் சேகரிக்கும் அதிகாரம் திணைக்களத்திற்கு அளிக்கப்படுகிறது ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 56-ஆம் பகுதியைப் பார்க்க), மற்றும்
- 'தனிநபர் அடையாளம் காட்டி' ('personal identifier') ஒன்றைத் தருமாறு உங்களை திணைக்களம் வேண்டலாம் ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 40 மற்றும் 46-ஆம் பகுதிகளைப் பார்க்க).

சூழ்நிலை மாற்றங்கள் அல்லது விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தவறான தகவல்கள் குறித்து திணைக்களத்திற்கு அறியத்தருமாறு விசா விண்ணப்பதாரிகளும், விசா வைத்திருக்கும் சிலரும் வேண்டப்படுகின்றனர் ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 104 மற்றும் 105-ஆம் பகுதிகளைப் பார்க்க).

'புலப்பெயர்வு சட்டம் மற்றும் புலப்பெயர்வு விதிமுறைகள் 1994'-இன் நோக்கங்களுக்காக ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தனிநபர் அடையாளங்காட்டிகளைத் தருமாறு திணைக்களம் உங்களை வேண்டக்கூடும்.

அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும்போது, உங்களைப் பற்றிய குறிப்பான சில தனிப்பட்ட தகவல்களைத் தருமாறு திணைக்களம் வேண்டும் (உதாரணமாக, பிரசைகளிடம் கடவுச்சீட்டு மற்றும் பிரசையல்லாதோரிடம் அடையாளம் மற்றும் 'விசா'விற்கான சான்று). நீங்கள் பிரசையல்லாதவராக இருந்து வேண்டப்படும் சான்றுகள் கொடுக்கப்படவில்லை என்றால் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படும் (பார்க்க: 'புலப்பெயர்வு சட்ட'த்தின் பகுதி 257A).

அவுஸ்திரேலியாவை விட்டு நீங்கள் வெளியேறும்போது, குறிப்பிட்ட சில 'தனிநபர் அடையாளம் காட்டிக'ளைத் ('personal identifiers') தருமாறு திணைக்களம் உங்களை வேண்டக்கூடும் ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 257A -ஆம் பகுதியைப் பார்க்க).

சட்டத்திற்குப் புறம்பான பிரசையல்லாதவர்களை அடையாளம் காணும் பொருட்டு, திணைக்களம் பின்வருவனவற்றை வேண்டலாம்:

- 'தனிநபர் அடையாளம் காட்டி' ('personal identifier') ஒன்று உள்ளடங்க, ஒருவரது அடையாளம் மற்றும் 'விசா' தகுதி குறித்த சான்று ('புலப்பெயர்வு சட்ட'த்தின் பகுதி 188 ஐப் பார்க்க).
- சட்டத்திற்குப் புறம்பான பிரசையல்லாதவர் என சந்தேகிக்கப்படும் நபரது வதிவிடம் அல்லது அடையாளம் குறித்த ஆவணங்கள் ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 18-ஆம் பகுதியைப் பார்க்க).

குடிவரவுத் தடுப்பில் இருக்கும் நபர்களும் தனிநபர் அடையாளம் காட்டிகளைத் தர வேண்டியது கட்டாயமாகும் (பார்க்க: 'புலப்பெயர்வு சட்ட'த்தின் 258 மற்றும் 261AA(1)-ஆம் பகுதிகள் மற்றும் 'புலப்பெயர்வு விதிமுறைக'ளின் விதிமுறை 3.30).

'வணிக பொறுப்பேற்பாளர்களது' ('business sponsors') விடயத்தில், "புலப்பெயர்வு சட்ட'த்தின் 2-ஆம் பகுதி, பிரிவு 3A, உபபிரிவு F- இல் சொல்லப்பட்டுள்ள 'பரிசோதகர் அதிகார' ('inspector powers') த்திற்கிணங்க, ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை 'திணைக்கள'மும், Fair Work Ombudsman (FWO) (பணியிட நியாய அரச குறைகேட்பாளர் (FWO)- அவர்களும் சேகரிக்கலாம்.

'புலப்பெயர்வு சட்ட'த்தின் 252-ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள தேடல் அதிகாரத்தின் பிரகாரம், ஒரு நபரிடமோ அல்லது அவரது உடைமைகளிலோ உள்ள ஆவணம் ஒன்றை, உதாரணத்திற்கு இந்த நபரது விசாவை இரத்து செய்ய ஆதாரமாக இருக்கும் ஆவணம் ஒன்றை, அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவர் தன் கைவசப்படுத்திக் கொள்ளலாம்.

செல்லுபடியாகாத போலி ஆவணம் ஒன்றை அதிகாரி ஒருவர் கைப்பற்றலாம் (இப்படிப்பட்ட ஆவணம் எப்படி கையாளப்பட வேண்டும் என்று சொல்லும் 'புலப்பெயர்வு சட்ட'த்தின் பகுதி 9 -இன் பிரிவு 1 மற்றும் உட்பிரிவு 487ZJ ஆகியவற்றைப் பார்க்க).

### குடியுரிமை சட்டம்

குடியுரிமைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தகுதிகள் தனிநபர் ஒருவருக்கு உள்ளது என்று திருப்தியடைவதற்காக பலதரப்பட்ட தனிநபர் தகவல்களைத் திணைக்களம் திரட்டலாம்.

பிரசாவுரிமை விண்ணப்பங்கள் சம்பந்தமாக 'தனிநபர் அடையாளம் காட்டிக'ளைக் கேட்க எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, மற்றும் முடிவெடுக்கும் அதிகாரிக்கு உங்களது அடையாளம் குறித்து திருப்பதி இல்லையெனில் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட இயலாது ('பிரசாவுரிமை சட்ட'த்தின் 2-ஆம் பகுதியின் 5-ஆம் பிரிவு மற்றும் பிரிவுகள் 17(3), 19D(4), 24(3), மற்றும் 30(3)-ஐப் பார்க்க).

செல்லுபடியாகாத போலி ஆவணம் ஒன்றை 'ஆணைப்பேராளர்' (delegate) ஒருவர் கைப்பற்றலாம் (இப்படிப்பட்ட ஆவணம் எப்படி கையாளப்பட வேண்டும் என்று சொல்லும் 'பிரசாவுரிமை சட்ட'த்தின் பகுதி 3 -இன் பிரிவு 1 மற்றும் உட்பிரிவு 45B ஆகியவற்றைப் பார்க்க).

#### IGOC சட்டம்

*Immigration (Guardianship of Children) Act 1946* (the IGOC Act) (*குடிவரவு (குழந்தைகள் பாதுகாவல்) சட்டம் 1946* (IGOC சட்டம்)) என்ற சட்டத்தின் கீழ், 21 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடைய பெற்றோர் அல்லது உறவினரால் அழைத்துவரப்படாமல் தனியாக வரும் வயதாகாத மற்றும் பிரசையல்லாத சிறார்களுக்கு (இவர்கள் 'IGOC வயதாகாதோர்' எனப்படுவர்) 'குடிவரவு அமைச்சர்' பாதுகாவலராக இருப்பார்.


© COMMONWEALTH OF AUSTRALIA, 2020

பாதுகாவருக்குள்ள பொறுப்புகளைப் பூர்த்திசெய்வதில் உதவுவற்காக, பொதுநல மற்றும் மாநில அல்லது எல்லைப்பகுதி அரச அதிகாரிகளுக்கு தனது பாதுகாவலர் அதிகாரங்களை மாற்றிக் கொடுக்க 'IGOC சட்டம்' அமைச்சரை அனுமதிக்கிறது (இவர்கள் 'பிரதிநிதித்துவ பாதுகாவலர்கள்' எனப்படுவர்). இப் பணியை ஆற்ற விருப்பத்துடன் முன்வரும் நபர்களும் அல்லது அமைப்புகளும் கூட 'IGOC வயதுவராதோருக்கு 'பாதுகாவலர்'களாக நியமிக்கப்படலாம். பொதுவான வார்த்தைகளில் சொல்லுவதாயின், தமது பொறுப்பில் இருக்கும் பிள்ளையின் அன்றாட கவனிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கான உரிமையும், பொறுப்பும் காவலர் ஒருவருக்கு இருக்கிறது என்று சொல்லலாம்.

IGOC சட்டத்தின் கீழ் குழந்தைகளது அன்றாட கவனிப்பு மற்றும் பொதுநலத்தை உறுதிப்படுத்துவதற்காக, 'IGOC வயதுவராதோ'ரைப் பற்றியும், அவாகளது பாதுகாவலர்களைப் பற்றியுமான தகவல்களைத் திணைக்களம் திரட்டுகிறது. 'IGOC வயதுவராதோ'ரது அன்றாட கவனிப்பும், பொதுநலத் தேவை வகளும் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்திற்கு உட்பட்டு கீழ் வருவோருக்கு திணைக்களம் தனிநபர் ஒருவரைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தலாம், அல்லது கீழ் வருவோரிடமிருந்து ஒருவரைப் பற்றிய தகவல்களைப் பெறலாம்:

- குழந்தை பொதுநல முகமைகள் உட்பட, மாநில/எல்லைப்பகுதி அதிகாரங்கள்
- அதிகாரம் மாற்றித்தரப்பட்டுள்ள பாதுகாவலர்கள்
- பாதுகாவலர்கள்
- பெற்றோர், கவனிப்பாளர்கள் மற்றும்/அல்லது உறவினர்கள், மற்றும்/அல்லது
- இதர அவுஸ்திரேலிய அரச முகமைகள்.

## சுங்கவரி சட்டம் மற்றும் தீர்வை சட்டம்

சுங்கவரி மற்றும் தீர்வை சட்டங்களையும், சம்பந்தப்பட்ட இதர அவுஸ்திரேலிய சட்டங்களையும் ('புலப்பெயர்வு சட்டம்' மற்றும் வரியிறுப்பு சட்டம் உள்ளடங்க) நிர்வகிப்பதில் பலதரப்பட்ட தனிநபர் தகவல்களையும், வர்த்தகத் தகவல்களையும் திரட்டும் அதிகாரம் திணைக்களத்திற்கு உள்ளது. குறிப்பாக, அவுஸ்திரேலியாவின் எல்லைகளைப் பாதுகாக்கவும், சுங்க வரிகள் திரட்டப்படுவதை உறுதி செய்யவும் இத்தகவல்களைத் திணைக்களம் திரட்டுகிறது.

சில தருணங்களில், சுங்கம் மற்றும் தீர்வை சட்டங்கள் மற்றும் வரியிறுப்பு சட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக எழும் விடயங்களை முன்னிட்டு தகவல்களைத் திரட்டுவதற்கான எமது படிவங்களில் தகவல் திரட்டலைக் குறித்த விசேடமான அறிவிப்புகளும் இருக்கலாம். குறிப்பிட்ட அந்த ஆவணத்தில் திரட்டப்பட்டுள்ள தனிநபர் தகவல்களின் சேகரிப்பு, பயன்பாடு மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பிட்ட தகவல்களும் இப்படிவங்களில் காணப்படும், மற்றும் தகவல் பாதுகாப்பு அறிவிப்போடு சேர்த்து இத் தகவல்களை வாசிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, 'சுங்கவரி சட்டம்', 'புலப்பெயர்வு சட்டம்' மற்றும் இதர சட்டங்களை நிர்வகிக்கும் பொருட்டு 'சுங்கவரி சட்ட'த்தின் 64ACA மற்றும் 64ACB பிரிவுகளின் கீழ் கப்பல் மற்றும் விமானம் மூலமாக அவுஸ்திரேலியாவிற்கு வரும் பயணிகள் மற்றும் அவற்றில் பணிபுரிவோர்களைப் பற்றிய குறிப்பிட்ட சில தகவல்களைத் திரட்ட வேண்டிய தேவை திணைக்களத்திற்கு உள்ளது.

## கடலாண்மை சட்டம்

கடல் மீது சட்ட ஒழுங்கைப் பராமரிக்கும் முகமைகளினால் கடலாண்மை அதிகாரங்கள் அமல்படுத்தப்படுவதற்காக தனிநபர் தகவல்களைத் திரட்டும் அதிகாரம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டவிரோத அயல்நாட்டு மீன்பிடிப்பு, சுங்கம், கடல்சார் பயங்கரவாதத் தடுப்பு, புலப்பெயர்வு, நோய்த்தடைக்காப்பு, போதைமருந்து கடத்தல் மற்றும் கடல் மீது செல்லுபடியாகும் சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவை உள்ளடங்க அவுஸ்திரேலியாவின் கடலாண்மை சட்டங்கள் அமல்படுத்தப்படுவதற்கு இந்த அதிகாரங்கள் உதவுகின்றன.

## தகவல் பாதுகாப்பு சட்டம் (Privacy Act)

பின்வருவனவற்றை சேகரிக்க தகவல் பாதுகாப்பு சட்டம் அனுமதிக்கிறது:

- சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் தருணங்களில், அல்லது சட்ட அமலாக்க செயல்பாடுகளில், அல்லது உங்களது சம்மதத்துடன் உணர்வார்ந்த (sensitive) முக்கிய தகவல்கள்
- திணைக்களத்தினது ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட செயல்முறைகள் அல்லது செயல்பாடுகளுக்குத் தேவைப்படும் அல்லது திணைக்களத்தின் செயல்முறைகள் அல்லது செயல்பாடுகளோடு நேரடித் தொடர்புடைய இதர தனிநபர் தகவல்கள்.

## சட்ட ஒழுங்கு அமலாக்க முகமையாக திணைக்களம் செயற்பட ஏது செய்யும் சட்டங்கள்

*Crimes Act 1914* (*குற்றவியல் சட்டம் 1914*), *Criminal Code Act 1995* (*குற்றவியல் கோவைச் சட்டம் 1995*), *Australian Nuclear Science and Technology Organisation Act 1987* (the ANSTO Act) *(அவுஸ்திரேலிய அணுவியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைப்பு சட்டம் 1987* (ANSTO சட்டம்)) and the *Independent National Security Legislation Monitor Act 2010 (மற்றும் சட்டமியற்றல் கண்காணிப்பு சட்டம் 2010)* ஆகிய சட்டங்களின் கீழ் குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக திணைக்களமானது சட்ட ஒழுங்கு அமலாக்க முகமையாக செயல்படுகிறது.

## உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை நாங்கள் சேகரிப்பதன் நோக்கம்

தனிநபர் குறித்த தகவல்களை நாங்கள் திரட்டுவதன் பிரதான நோக்கம், உங்களது குடிவரவு அல்லது/மற்றும் பிரசாவுரிமை செயல்வழிப்பாதை(யவாறயல)யோடும், எல்லையைக் கடந்து வரும் பொருட்களின் நகர்வுகளோடும் தொடர்புடைய செயல்முறைகள் அல்லது செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவேயாகும். பின்வரும் திட்டங்களை நாங்கள் நிர்வகிக்கிறோம்:

- விசா மற்றம் புலப்பெயர்வு
- வரியிறுப்பு, சுகாதாரம், நோய்த்தடைக்காப்பு, வணிகம், குற்றவியல், அறிவுசார் சொத்து மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றைக் குறித்த சட்டங்களை உள்ளடக்கிய குறிப்பிட்ட மற்ற அவுஸ்திரேலிய சட்டங்கள் உள்ளடங்க, சுங்கம் மற்றும் தீர்வை
- அகதியர் மற்றம் மனிதாபிமான உதவி
- எல்லைக் கட்டுப்பாடு
- விசா விதிமுறைக் கட்டுப்பாடு மற்றும் குடிவரவுத் தகுநிலைத் தீர்வு
- குடிவரவுத் தடுப்பு, அகற்றல் அல்லது 'பிராந்திய செயலாக்க மையம்' ஒன்றிற்கு இடம் மாற்றல் (சட்ட அமலாக்கம், பொதுநல சேவைகள் மற்றும் குடியமரல் சேவை வழங்குதல்கள், போன்ற கரைகடந்த செயல்பாட்டு முறைகளில் உதவும் சேவை வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டு அதிகாரங்கள் உள்ளடங்க)
- பிரசாவுரிமை.

விசா, பொறுப்பேற்பாதரவு (sponsorship), வியாபாரம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, நோய்த் தடைக்காப்பு அல்லது பிரசாவுரிமை ஆகியவற்றிற்கான விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கியுள்ள தகவல்கள் அப்பிரதான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்.

தகவல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், 'இரண்டாம்நிலை (secondary) நோக்கம்' ஒன்றிற்காகவும் தகவல்கள் பயன்படுத்தப்படலாம். பொதுவாக இங்குதான் உங்களைப் பற்றிய தகவல்களை திணைக்களம் பயன்படுத்தும் அல்லது வெளிப்படுத்தும் என்று நியாயமான அளவிற்கு நீங்கள் எதிர்பார்க்கலாம், மற்றும் இரண்டாம்நிலை நோக்கம் என்பது பிரதான நோக்கத்தோடு நேரடித் தொடர்புடையதாகவோ ('உணர்வார்ந்த முக்கிய தகவல்களுக்காக' (sensitive information)), அல்லது பிரதான நோக்கத்தோடு சம்பந்தப்பட்டதாகவோ இருக்கும். உதாரணமாக, விசா விண்ணப்பம் ஒன்றில் நீங்கள் கொடுத்துள்ள தகவல்கள் இதைத் தொடர்ந்து நீங்கள் இடும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படலாம் *Freedom of Information Act 1982* (*'தகவலறியும் உரிமை சட்டம் 1982*') மற்றும் 'தகவல் பாதுகாப்பு சட்டம்' ஆகியவற்றின் கீழ் உள்ளடங்க. மேலும், உங்களுடைய புலப்பெயர்வு விடயங்கள் சம்பந்தமாக நீங்கள் கொடுத்துள்ள மின்னணுத் தொடர்பு விபரங்களையும் நாங்கள் பயன்படுத்தக் கூடும்.

## உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களைத் திணைக்களம் சேகரிக்கவில்லை என்றால் அதனால் ஏ ற்படும் விளைவுகள்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் சேகரிக்கப்படவில்லை என்றால், உங்களுடைய விசா அல்லது பிரசாவுரிமை விண்ணப்பத்தினைச் செயல்படுத்த அல்லது (உரிய வேளைகளில்) வியாபாரம், இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் நோய்த்தடைக்காப்பு ஆகியவற்றிற்கான ஆதரவு சேவைகளை உங்களுக்கு அளிக்க திணைக்களத்தினால் இயலாமல் போகக்கூடும்.

உங்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டத் தவறினால், தனது சட்டபூர்வ கடப்பாடுகளையும் (குறிப்பாக சட்ட இணக்கம் தொடர்பாக), உங்களுக்கு கவனிப்பு அளிக்க வேண்டிய கடப்பாடுகளையும், அல்லது அவுஸ்திரேலியாவின் சர்வதேச கடப்பாடுகளையும் பூர்த்தி செய்வதில் திணைக்களத்திற்கு இடைஞ்சல் ஏற்படக் கூடும்.

© COMMONWEALTH OF AUSTRALIA, 2020

## மூன்றாம் தரப்பினருக்கு உங்ளைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களை வழமையாக வெளிப்படுத்துதல்

### முன்மொழியப்பட்டுள்ள சார்பாளர்களுக்கு வெளிப்படுத்துதல்

குடும்ப அங்கத்தவர், புலப்பெயர்வு முகவர், சுங்கத் தரகர், பயண அல்லது வான்வழிப் பயண முகவர், அரசகுறைகேட்பாளர் (Ombudsman), பாராளுமன்ற உறுப்பினர், அல்லது உங்களைச் சார்புபடுத்தும் சட்டதரணி போன்ற உங்களால் முன்மொழியப்பட்டுள்ள மூன்றாம் தரப்பினருக்கு, நாங்கள் அப்படி செய்யக்கூடாது என்று நீங்கள் கேட்டிருந்தாலொழிய, உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம்.

'பொறுப்பேற்பாதரவு' (sponsorship) கொடுத்து நீங்கள் வரவழைக்கும் நபருக்கோ அல்லது உங்களுக்குப் பொறுப்பேற்பாதரவு கொடுக்கும் நபருக்கோ உங்களைப் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்படலாம்.

### மற்ற அரசாங்க முகமைகளுக்கு வழமையாக செய்யப்படும் வெளிப்படுத்துதல்கள்

மேலும், தனது செயல்முறைகள் மற்றும் செயல்பாடுகளை நிருவகிக்கும் பொருட்டு, குறிப்பிட்ட சில சூழல்களில், இதர அரச முகமைகளுக்கு ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்கான அதிகாரம் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உதாரணங்களில் உங்களது அடையாளம், மற்றும் நீங்கள் கொடுத்துள்ள ஆவணங்களின் உண்மைத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல், விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்தல், அல்லது சட்ட இணக்கக் கடப்பாடுகளை நிருவகித்தல் போன்ற காரணங்களுக்காக தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துதல் என்பன உள்ளடங்கும்.

நாங்கள் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் அரச முகமைகளில் பின்வருவன, ஆனால் இவை மட்டுமல்ல, உள்ளடங்கும்:

- *Social Security Act 1991* (*சமூக பாதுகாப்பு சட்டம் 1991*), *Child Support (Assessment) Act 1989* (*குழந்தைகள் ஆதரவு (மதிப்பீடு) சட்டம் 1989*), மற்றும் *Child Support (Registration and Collection) Act 1988* (*குழந்தைகள் ஆதரவு (பதிவு மற்றும் சேகரிப்பு) சட்டம் 1988*) –ஆகிய சட்டங்களை நிர்வகிக்கும் பொருட்டு, 'மானிட சேவைகள் திணைக்கள' (Department of Human Services) த்திற்கு
- 'சமூக சேவைகள் திணைக்கள' (Department of Social Services) த்திற்கு
- அவுஸ்திரேலியாவின் உயிரினப் பாதுகாப்பு முறைமைகளை நிர்வகிக்கவும், *Quarantine Act 1908* (*நோய்த்தடைக்காப்பு சட்டம் 1908*), *Export Contrtol Act 1982* (*ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டம் 1982*) மற்றும் *Imported Food Control Act 1992* (*உணவு இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டம் 1992*) ஆகிய சட்டங்களை நிர்வகிக்கவும் 'வேளாண்மைத் திணைக்கள' (Department of Agriculture) த்திற்கு
- 'சிகிச்சை சாதன நிர்வாக' (Therapeutic Goods Administration) த்திற்கு
- 'தொழில்கள், புதினம் மற்றும் அறிவியல் திணைக்கள' (Department of Industry Innovation and Science) த்திற்கு
- National Anti-Doping Scheme (தேசிய போதை மருந்து தடுப்புத் திட்டம்) எனும் திட்டத்தினை நிர்வகிக்க Australian Sports Anti-Doping Authority (அவுஸ்திரேலிய விளையாட்டு போதைமருந்து தடுப்பு அதிகாரம்) எனும் அமைப்பிற்கு
- *Education Services for Overseas Students Act 2000 (வெளிநாட்டு மாணவருக்கான கல்வி சேவைகள் சட்டம் 2000)-யினை* நிருவகிப்பதற்காக Department of Education (கல்வி திணைக்கள)த்திற்கு
- வேலை வாய்ப்பு சேவைகள் சம்பந்தமாக தகவல் விபரங்களை ஒப்பிட்டுப் பார்க்க, 'வேலைவாய்ப்பு, திறன்கள், சிறு மற்றும் குடும்ப வர்த்தகங்கள் திணைக்கள' (Department of Employment, Skills, Small and Family Business) த்திற்கு
- *Veterans' Entitlements Act 1986* (*முன்னாள் படைவீரர்கள் உரிமங்கள் சட்டம் 1986)* –ஐ நிர்வகிப்பதற்காக 'முன்னாள் படைவீரர் விவகார திணைக்கள' (Department of Veterans' Affairs) த்திற்கு
- *Income Tax Assessment Act 1997* (*வருமான வரி மதிப்பீட்டு சட்டம் 1997*) –ஐயும், இதர வரியிறுப்பு சட்டங்களையும் நிர்வகிப்பதற்காக, 'அவுஸ்திரேலிய வரியிறுப்பு அலுவலக'(Australian Taxation Office) (ATO)) த்திற்கு
- *Fair Work Act 2009* (*பணியிட நியாய சட்டம் 2009*) –த்தினை நிர்வகிப்பதற்காக 'பணியிட நியாய அரச குறைகேட்பாளர் (FWO) அவர்களுக்கு
- *Australian Passport Act 2005* (*அவுஸ்திரேலிய கடவுச்சீட்டு சட்டம் 2005*) –ஐ நிர்வகிப்பதற்காகவும், பாதுகாப்பு விசா செயல்பாடுகளை நிறைவேற்றவும், இரு நாட்டு பிரசாவுரிமை உள்ளவர் என்ற முறையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு எதனையும் வைத்திருப்பதற்கான உரிமம் உள்ளவர் என்றால் அது சம்பந்தமாக நாட்டுநடப்புத் தகவல்களைப் பெறுவதற்காகவும், 'வெளிநாட்டு விவகாரம் மற்றும் வணிக திணைக்கள' (Department of Foreign Affairs and Trade (DFAT) த்திற்கு
- *Commonwealth Electoral Act 1918* (*பொதுநலஅரசு தேர்தல் சட்டம் 1918)* –ஐ நிர்வகிப்பதற்காக, 'அவுஸ்திரேலிய தேர்தல் ஆணைய' (Australian Electoral Commission) த்திற்கு.

#### மீள் பரிசீலணை, தணிக்கை மற்றும் விசாரணை அமைப்புகள் (Review, Audit and Investigation Bodies)

'தகுதிப்படுத்தும் நற்பண்புகள்' ('merits')க்கு அல்லது 'நீதிமன்ற' முடிவு ஒன்றை மீளாய்வு செய்ய நீங்கள் விண்ணப்பித்தால், வேண்டப்படும் தகவல்களை மீளாய்வினைச் செய்யும் தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்திற்குத் திணைக்களம் கொடுக்கும்.

பின்வருவன போன்ற விசாரணை அமைப்புகளுடன் நாங்கள் தகவல்களைப் பகிர்ந்துகொள்கிறோம்:

- 'பொதுநலஅரசு அரசகுறைகேட்பாளர்' (Commonwealth Ombudsman)
- 'அவுஸ்திரேலிய தகவல் ஆணையர் அலுவலகம்' (Office of the Australian Information Commissioner)
- 'அவுஸ்திரேலிய தேசிய தணிக்கை' (Australian National Audit Office)
- 'அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்' (Australian Human Rights Commission)
- 'நியாய வேலை' அரசகுறைகேட்பாளர்' (Fair Work Ombudsman).

#### அவசரநிலைகள் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல்

அவசரநிலை, கடும் காயம் அல்லது மரணம் போன்ற தருணங்களில் அவுஸ்திரேலிய சட்ட அமலாக்க முகமைகளுக்கோ அல்லது அவசரகால சேவைகளுக்கோ உங்களது தனிநபர் தகவல்கள் தரப்படலாம்.

குற்றவியல் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவும் தேவைப்படும் தருணங்களில் அவுஸ்திரேலிய (பொதுநல அரசு, மாநில மற்றும் எல்லைப்பகுதி) மற்றும் வெளிநாட்டு சட்ட அமலாக்க முகமைகளுக்கும் அமைப்புகளுக்கும் குற்றச்செயல் ஒன்றைத் தடுத்தல், கண்டுபிடித்தல், புலன் விசாரித்தல் அல்லது தண்டித்தல் சம்பந்தமாக சட்ட அமலாக்கம் தேவைப்படும்போது திணைக்களம் தகவல்களை வெளிப்படுத்துகிறது.

### ஆதரவுத் திட்டங்கள்

விசா செயல்பாட்டு முறைகளின்போது திரட்டப்படும் தகவல்கள் பின்வரும் திணைக்களங்களுக்கு வெளிப்படுத்தப்படக் கூடும்:

- குடியமரல் ஆதரவுகளை வழங்கும் பொருட்டு, 'சமூக சேவைகள் திணைக்களம்' (Department of Social Services)
- ஆங்கில மொழிப் பயிற்சிக்கு வசதி செய்துதரவும், அதைக் கண்காணிக்கவும், 'தொழில்கள், புதினம் மற்றும் அறிவியல் திணைக்களம்' (Department of Industry Innovation and Science).

### அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரங்களுக்கு தகவல்களை வெளிப்படுத்துதல்

அவுஸ்திரேலியாவில் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கு நீங்கள் விண்ணப்பித்தால், உங்களது குடிவரவு நிலை மற்றும் வேலை செய்வதற்கான உரிமங்கள், மற்றும் சில தருணங்களில் உங்களுக்கு அவுஸ்திரேலியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்த தகவல்களை தகுந்த அதிகாரங்களுக்குத் திணைக்களம் வெளிப்படுத்தக் கூடும். அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருக்கக்கூடிய தகுநிலை உங்களுக்கு இருக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்காக இத் தகவல்கள் பாவிக்கப்படும். 'சுங்கவரி சட்ட'த்தின் கீழ் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு நீங்கள் விண்ணப்பித்தால் குறிப்பிட்ட சில தகவல் வெளிப்படுத்தல்களும் ஏற்படுத்தப்படலாம்.


© COMMONWEALTH OF AUSTRALIA, 2020

# ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள போது வெளிப்படுத்துதல்

'தனிநபர் அடையாளம் காட்டி' ('personal identifier') பற்றி பக்கம் 1-இல் விளக்கப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட சூழ்நிலைகளில், 'தனிநபர் அடையாளம் காட்டிக' (personal identifiers) ளை வெளிப்படுத்தும் அதிகாரம் 'புலப்பெயர்வு சட்டம்' பகுதி 4A மற்றும் 'பிரசாவுரிமை சட்டம்' பகுதி s43- ஆகியவற்றின கீழ் திணைக்களத்திற்கு உள்ளது. உதாரணங்களில் பின்வருவன அடங்கும்:

- பிரசாவுரிமை அல்லது விசா நிலையை உறுதிப்படுத்த
- குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்த
- அவுஸ்திரேலிய அரச முகமை ஒன்றோடு ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்பாட்டின் கீழ் அடையாளம் காட்டும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல்
- நீதிமன்றம், தீர்ப்பாயம், அல்லது விசாரணை அமைப்பு ஒன்றிற்கு தேவைப்படும் தகவல்களைத் தரல்
- அவுஸ்திரேலிய சட்டத்தினால் வேண்டப்படும் பொழுது.

பிரசாவுரிமை அல்லது புலப்பெயர்வு சட்டமியற்று நோக்கங்களுக்காக, பிரசாவுரிமை சட்டத்தின் கீழ் 'தனிநபர் அடையாளம்காட்டிக'ளை வெளிப்படுத்தும் அதிகாரம் திணைக்களத்திற்கு உள்ளது.

கீழே தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில், ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை ('தனிநபர் அடையாளம் காட்டிகள்' உள்ளடங்க) வெளிப்படுத்தும் அதிகாரத்தை திணைக்களத்திற்கு புலப்பெயர்வு சட்டத்தின் பகுதி 4A வழங்குகிறது:

- கீழ்வரும் நோக்கங்களுக்காக விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்:
  - நபர் ஒருவரது அடையாளத்தைக் காண, அல்லது உறுதிப்படுத்த
  - அவுஸ்திரேலியாவிற்குள் நபர்கள் நுழையும் அல்லது நபர்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறும் செயல்பாட்டு முறைகளை இலகுவாக்க
  - குற்ற வரலாறு, நடத்தை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அல்லது தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ள பிரசையல்லாத நபர்களை அடையாளம் காண
  - புலப்பெயர்வு விடயங்களில் ஆவணங்கள் மற்றும் அடையாளம் குறித்த மோசடி வேலைகளைத் தடுக்க
  - பாதுகாப்பு விசா செயற்பாடுகளில் உதவ
- நபர் ஒருவரை அடையாளம் கண்டு அவர் இருக்கும் இடத்தை அறிய ('புலப்பெயர்வு சட்ட'த்தின் பகுதிகள் 33FA மற்றும் 33FC ஆகியவற்றையும் பார்க்க)
- 'அவுஸ்திரேலிய தேசிய தணிக்கை அலுவலகம்' மற்றும் 'அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்' போன்ற சிபார்சு செய்யப்பட்டுள்ள விசாரணை அமைப்புகளுக்கு
- அவுஸ்திரேலியாவிலிருந்து ஒரு நபரை வெளியேற்ற, அல்லது ஒரு நபரை அவுஸ்திரேலியாவிற்கு அல்லது அவுஸ்திரேலியாவிலிருந்து இன்னொரு நாட்டிற்கு 'மீட்டொப்படைப்பு' (extradite) செய்வதற்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு அரசாங்கங்களுடன் சேர்ந்து செய்ய
- புலப்பெயர்வு விடயங்களை நிர்வகிக்கும் பொருட்டு ('புலப்பெயர்வு சட்ட'த்தின் பகுதி 5A(3)-ஐப் பார்க்க), குறிப்பிட்ட வெளிநாட்டு அரசுகளுக்கும், வெளிநாட்டு அரசுகளின் சட்ட நடைமுறைப்படுத்து அல்லது எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்புகளுக்கும் தகவல்கள் கிடைப்பதற்கு ஒழுங்கு செய்ய
- சர்வதேச குற்றிவியல் விடயங்களில் ஒத்தாசை பெற அல்லது அளிக்க.

'தனிநபர் அடையாளம் காட்டிகள்' குறித்த மேலதிக விடயங்களுக்கு 'படிவம் 1243i-யைப் பார்க்க.

'பணியாட்கள் விசா'('worker visas) க்கள் தொடர்பாக, 'பொறுப்பாதரவாளர்கள்' (sponsors) அல்லது விசா வைத்திருப்பவர்களைப் பற்றிய குறிப்பிட்ட சில தகவல்களை இவர்களையொத்த விசா வைத்திருப்பவருக்கு அல்லது பொறுப்பேற்பாதரவாளருக்குக் கொடுக்கும் அதிகாரம் திணைக்களத்திற்கு உள்ளது ('புலப்பெயர்வு சட்ட'த்தின் 140ZH பிரிவையும், விதிமுறைகள் 2.103, 2.104 மற்றும் 2.105 –ஆகியவற்றையும் பார்க்க).

'எல்லைப் பாதுகாப்பு சட்ட' த்தின் பகுதி -6-இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் 'குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் தகவல்களான ('எல்லைப் பாதுகாப்பு சட்டம்' பகுதி 4(1)-இனைப் பார்க்கவும்) தனிநபர் தகவல்களை வெளிப்படுத்தும் அதிகாரமும் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், கீழ் வரும் அமைப்புக்களுக்கு தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதை 'எல்லைப் பாதுகாப்பு சட்டம்' அனுமதிக்கிறது:

- பொதுநலஅரசு, மாநில மற்றும் எல்லைப்பகுதி முகமைகள் அல்லது அதிகாரங்கள்
- அவுஸ்திரேலிய மத்திய காவல்துறை' (AFP) அல்லது மாநில அல்லது எல்லைப்பகுதி காவல்துறை அல்லது காவல் சேவை
- மரண விசாரணையாளர்
- பொதுநலஅரசு, மாநிலங்கள் அல்லது எல்லைப்பகுதிகளில் சட்டரீதியான பதவிகளில் இருப்பவர்கள் (உதாரணம்: அரசகுறைகேட்பாளர் ஒருவர்)
- 'அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படை'யினது Secrecy and Disclosure (தகவல் பாதுகாப்பு மற்றும் தகவல் வெளிப்பாடு) 'விதிமுறை 2015'-இனால் பரிந்துரைக்கப்பட்டுள்ள 'அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம்' போன்ற அமைப்புக்கள் அல்லது நபர்கள்
- வெளிநாடு அல்லது சர்வதேசப் பொது அமைப்பு

இருப்பினும், 'எல்லைப் பாதுகாப்பு சட்ட'த்தின் பகுதி – 6- இல் சொல்லப்பட்டுள்ள குறிப்பிட்ட இதர தேவைப்பாடுகளோடு சேர்த்து, 'எல்லைப் பாதுகாப்பு சட்ட'த்தில் அட்டவணையிடப்பட்டுள்ள 'அனுமதிக்கப்பட்ட நோக்கங்க'ளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நோக்கத்திற்காக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டால், மேலே சொல்லப்பட்டுள்ள அமைப்புகளில் ஒன்றிற்கு மட்டுமே தகவல்களை வெளிப்படுத்துவற்கான அதிகாரம் உள்ளது. தகவல் வெளிப்பாடு கீழே தரப்பட்டுள்ள உதாரணங்களில் ஒன்றிற்காக இருக்கலாம்:

- வணிகம் சம்பந்தமாக குற்றவியல் சட்டம் அல்லது சட்டம் ஒன்றை நிர்வகித்தல் அல்லது அமலாக்கம் செய்தல்
- மரண விசாரணை அல்லது ஆய்விற்கு ஒத்தாசை செய்தல்
- பொது சுகாதாரம், அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களது உயிர் அல்லது பாதுகாப்பினை காபந்து செய்தல்
- *Census and Statistics Act 1905* (*மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர சட்டம் 1905*) அல்லது *Australian Bureau of Statistics Act 1975* (*அவுஸ்திரேலிய புள்ளிவிவர செயலக சட்டம் 1975*) ஆகிய சட்டங்களின் கீழ் புள்ளிவிவரங்களை சேகரித்தல் அல்லது சரிபார்த்தல்
- அரச வருவாயைப் பாதுகாத்தல்
- நபர் ஒருவரது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் அல்லது அவரது பிரசாவுரிமை அல்லது விசா நிலவரத்தை சரிபார்த்தல்
- அவுஸ்திரேலியப் பிரசையல்லாதவர்களுக்கு சேவைகள் வழங்கல்
- 'தேசிய போதை மருந்து தடுப்புத் திட்ட'த்தை நிர்வகித்தல்
- அவுஸ்திரேலியாவிற்கும், இன்னொரு வெளிநாட்டிற்கும் இடையேயான குடிவரவு, நோய்த்தடைக்காப்பு அலல்து எல்லைக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட நோக்கம் ஒன்றிற்காக
- Customs Act, Migration Act, Maritime Powers Act, Citizenship Act, IGOC Act ('சுங்கவரி சட்டம்', 'புலப்பெயர்வு சட்டம்', 'பிரசாவுரிமை சட்டம்', 'IGOC சட்டம்', இதரம்) உட்பட பல்வேறு சட்டவாக்கங்களுக்கு உட்பட்ட விடயங்கள்
- பாதுகாப்பு அல்லது தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஒரு நோக்கம்.

தகவல் வெளிப்படுத்தப்படுவதற்கு தனிநபர் ஒருவர் சம்மதித்தாலும், தனிநபர் ஒருவரது உயிர் அல்லது உடல்நலத்திற்கு உள்ள வினயமான அச்சுறுத்தலைத் தடுக்கவும் அல்லது மட்டுப்படுத்தவும், அல்லது தகவல்கள் ஏற்கனவே சட்டப்படி பொதுப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தாலும், பாதுகாக்கப்பட்ட தனிநபர் தகவல்களை வெளிப்படுத்தும் அதிகாரம் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

'எல்லைப் பாதுகாப்பு சட்ட'த்தின் பகுதி -6-இல் சொல்லப்பட்டுள்ள சில ஏற்பாடுகளுக்கு இணங்க ஏற்படுத்தப்படும் தகவல் வெளிப்படுத்தல்கள் அச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் நோக்கங்களுக்காக செய்யப்படும் வெளிப்படுத்தல்களாக எடுத்துக்கொள்ளப்படும் என்று 'எல்லைப் பாதுகாப்பு சட்ட'த்தின் பகுதி 51 கூறுகிறது.

மேலும், திணைக்களத்திற்கு சேவை செய்வதற்காக நம்பிக்கைக்கு உரிய ஒருவர் பணியமர்த்தப்படும்போதோ அல்லது அவரது சேவைக் காலத்திலோ 'குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு' தகவல்கள் வெளிப்படுத்தப்படுவது எஎல்லைப் பாதுகாப்பு சட்ட'த்தின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட வெளிப்படுத்தல்கள் எதுவும் 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்திற்கு இணங்க இருக்க வேண்டும் என்பதைத் திணைக்களம் உறுதிப்படுத்தும்.

© COMMONWEALTH OF AUSTRALIA, 2020

‘சுங்கவரி சட்டம் மற்றும் விதிமுறைகள்’ போன்ற சுங்கவரி சம்பந்தப்பட்ட சட்டமியற்றல்களில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளிலும் பாதுகாக்கப்பட்ட தகவல்களான தனிநபர் தகவல்களை வெளிப்படுத்தும் அதிகாரம் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

## ‘நடமாட்டப் பதிவுக’ளை வெளிப்படுத்தல்

**(Disclosure of Movement Records)**

அவுஸ்திரேலியாவிற்கு வந்து செல்லும் பயணிகளது வருகை மற்றும் புறப்பாட்டுப் பதிவுகள் ‘நடமாட்டப் பதிவுகள் தகவல்தள’ (movement records database) த்தில் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. கீழ் வரும் நோக்கங்களுக்காக இவை வெளிப்படுத்தப்படலாம்:

- ‘புலப்பெயர்வு சட்டம்’
- *Family Law Act 1975* (*‘குடும்ப சட்டம் 1975’*)
- சுங்கம் மற்றும் தீர்வை சட்டங்கள்
- தொற்றுத்தடைக்காப்பு (quarantine) அல்லது சுகாதார சட்டங்கள்
- சட்ட நடைமுறைப்படுத்தல்
- *Education Services for Overseas Students Act 2000* (*வெளிநாட்டு மாணவருக்கான கல்வி சேவைகள் சட்டம் 2000)*
- ‘முதல் வீடு வாங்குவோருக்கான திட்டங்கள்’, அல்லது ‘குழந்தைகள் மற்றும்/அல்லது பொதுநலத் திட்டங்கள்’ போன்றவற்றை நிர்வகிக்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ள பொதுநலஅரசு, மாநில அல்லது எல்லைப்பகுதி சட்டங்களுக்காக.

## சட்ட அமலாக்கம் மற்றும் இத்தோடு சம்பந்தப்பட்ட காரணங்களுக்காக தகவல்களை வெளிப்படுத்தல்

சட்ட அமலாக்கம் மற்றும் இத்தோடு சம்பந்தப்பட்ட காரணங்களுக்காக திணைக்களமானது தகவல்களை பின் வருவனவற்றை உள்ளடக்கிய அமைப்புகளுக்கு பொதுவாக வெளிப்படுத்தும் (‘புலப்பெயர்வு மற்றும் குடியுரிமை சட்டங்க’ளின் கீழ் மேற்கொள்ளப்படும் சட்ட அமலாக்க நடவடிக்கைகள் மற்றும் இதர சட்ட அமலாக்க அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் சட்ட அமலாக்க நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்கும்):

- நடத்தைத் தேவைகளை மதிப்பீடு செய்து நடைமுறைப்படுத்தும் பொருட்டு அவுஸ்திரேலிய மற்றும் வெளிநாட்டு சட்ட அமலாக்க முகமைகளுக்கு
- குடிவரவு மோசடிகள், தேசிய பாதுகாப்பு விடயங்கள், சந்தேகிக்கப்படும் போர்க்குற்ற ஈடுபாடு, அல்லது மனிதஇனத்திறகு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை அடையாளம் காண அல்லது விசாரிக்க, அவுஸ்திரேலிய மற்றும் வெளிநாட்டு சட்ட அமலாக்க முகமைகள் மற்றும் புலனாய்வு முகமைகள் அல்லது ஆணையங்கள், ‘தேசிய பொது காவல்துறை சேவைகள்’, ‘இன்ட்டர்போல்’, ‘தேசிய எல்லைப் பாதுகாப்பு மையம்’ ‘க்ரிம்ட்ராக்’ (CrimTrac), ‘ஆஸ்ட்லாக்’ (AusTRAC) முறைமைப்படுத்து முகமைகள், பாராளுமன்ற விசாரணை ஆணையங்கள், சர்வதேச முறைமன்றங்கள் மற்றும் வெளிநாட்டு குடிவரவு அதிகாரிகளுக்கு
- *Law Enforcement Integrity Commissioner Act 2006* (*சட்ட அமலாக்க நாணய ஆணையர் சட்டம் 2006*) எனும் சட்டத்தினை நிர்வகிக்க ‘சட்ட அமலாக்க நாணய அவுஸ்திரேலிய ஆணையர்’ அவர்களுக்கு
- வேலை சம்பந்தப்பட்ட விசா நிபந்தனைகளை மீறி வேலை செய்துகொண்டிருப்பவர்களைக் கண்டுபிடிக்க, ATO, சென்ட்டர்லிங்க், DHS மற்றும் இதர பொதுநலஅரசு அல்லது மாநில மற்றும் எல்லைப்பகுதி முகமைகளுக்கு
- சட்டத்திற்குப் புறம்பான பிரசையில்லா நபர்களைக் கண்டறிய, AFP மற்றும் அவுஸ்திரேலிய காவல்துறையினருக்கு
- புலப்பெயர்வு மற்றும் பிரசாவுரிமைக் குற்றங்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தும் பொருட்டு, ‘பொது வழக்குத்தொடர்வு இயக்குநர்’ (Director of Public Prosecutions) அவர்களுக்கு
- சட்டத்திற்குப் புறம்பான பிரசையில்லா நபர் ஒருவரை அகற்றும் பொருட்டு வெளிநாட்டு அரசுகளுக்கு
- விசா நிபந்தனைகளும், பொறுப்பாதரவாளர்க’ (sponsors)ளது கடப்பாடுகளும் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கவும், தண்டணை சுமத்தப்படும் தருணங்களை அறியத்தரவும், FWO பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள், பணியமர்த்துனர்கள், பொறுப்பாதரவு அளிக்கப்பட்டுள்ளவர்கள், பொறுப்பாதரவாளர்கள், பணியாட்கள் வழங்குநர்கள் ஆகியோருக்கு
- சட்ட அமலாக்கம் அல்லது தேசிய பாதுகாப்பு ஆகியவற்றைக் குறித்த பிரச்சினைகளை அடையாளம் காணும் பொருட்டு, விசா விண்ணப்பதாரிகள் மற்றும் ‘அகதியர் மனிதாபிமான’த் திட்டத்தின் கீழ் முன்மொழிபவர்களைப் பற்றிய தனிநபர் தகவல்கள் தொடர்பாக AFP -யை உள்ளடக்கிய சட்ட அமலாக்க முகமைகள்.

## சட்ட அமலாக்க முகமை என்ற முறையில் திணைக்களத்தினால் செய்யப்படும் தகவல் வெளிப்பாடுகள்

பின்வரும் சட்டங்களின் கீழ், குறிப்பிட்ட சில காரணங்களுக்காக திணைக்களம் ஒரு சட்ட அமலாக்க முகமையாக செயல்படும்: the *Crimes Act 1914,* the *Criminal Code Act 1995,* the *Australian Nuclear Science and Technology Organisation Act 1987* (the ANSTO Act) மற்றும் the *Independent National Security Legislation Monitor Act 2010* (*குற்றவியல் சட்டம் 1914*, *குற்றவியல் கோவை சட்டம் 1995*, *அவுஸ்திரேலிய அணுவியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைப்பு சட்டம் 1987* (ANSTO சட்டம்) *மற்றும் சுதந்திர தேசிய பாதுகாப்பு சட்டமியற்றல் கண்காணிப்பு சட்டம் 2010*), மற்றும் இந்த சட்டங்களின் கீழ் தனது செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் ஆற்ற தனிநபர் தகவல்களை திணைக்களம் வெளிப்படுத்தக்கூடும்.

## நிகழ்சித்திட்ட நிர்வாகம் சம்பந்தப்பட்ட மற்ற வெளிப்படுத்தல்கள்

### ஆதரவளிப்பு உறுதிமொழி (Assurance of support)

செலுத்தப்பட்டுள்ள பிணைத்தொகைகளை விடுவித்தல், அல்லது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பட்டுள்ள கடன்களை மீட்டல் ஆகிய காரணங்களை முன்னிட்டு ‘ஆதரவளிப்பு உறுதிமொழி’ கொடுப்பவர்களைப் பற்றிய தகவல்கள் ‘சென்ட்டர்லிங்க்’ –கிற்கு வெளிப்படுத்தப்படும்.

### வேலை, வேலையாட்கள் பற்றாக்குறை நிரப்பல் மற்றும் தொழில் திறன்கள் (Employment, labour supply and business skills)

பணியமர்த்துநர்களுக்கும், வேலையாட்களை ஏற்பாடு செய்து தருபவர்களுக்கும், வேலையாட்களை ஏற்பாடு செய்து தரும் முகமை ஒன்றின் மூலமாக உங்களது சேவைகளைப் பயன்படுத்தும் மூன்றாம் தரப்பினருக்கும் உங்களது புலப்பெயர்வு நிலை, வேலை செய்வதற்கான உரிமைகள் மற்றும் உங்களது விசாவின் வகை மற்றும் அதன் காலம் ஆகியவை குறித்த தகவல்களைத் திணைக்களம் வெளிப்படுத்தக் கூடும். உதாரணத்திற்கு, நீங்கள் வேலைக்காக விண்ணப்பிக்கும் போது, பணியமர்த்துநர் அல்லது வேலையாட்களை ஏற்பாடு செய்து தருபவருக்கு உங்களுக்குள்ள வேலை செய்யக் கூடிய தகுதியைத் திணைக்களம் வெளிப்படுத்தலாம்.

‘அரசாங்க தொழில் தகவல் சேவை’களை தொழில் திறன்கள் அடிப்படையில் புலம்பெயர்ந்தவர்கள் பெற உதவும் நோக்கத்தில், மாநில மற்றும் எல்லைப்பகுதி ‘பொருளாதார அபிவிருத்தித் துறைக’ளுக்கும், முகமைகளுக்கும் திணைக்களம் வெளிப்படுத்தலாம்.

### பயிற்சி மற்றும் கல்வி (Training and education)

பின்வருவோருக்கும் ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம்:

- பயிற்சி அல்லது படிப்பு ஒன்றை அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ள விரும்புவோருக்கு உதவுவதற்காக, DFAT, ‘தொழில்கள் திணைக்களம்’, மற்றும் ‘கல்வி திணைக்கள’த்திற்கு
- ‘முன் மொழியப்பட்டுள்ள பணியிடக் கூறு’ (proposed workplace component) ஒன்றின் காரணமாக அவுஸ்திரேலிய தொழிலாளர் சந்தையின் மீது ஏற்படவல்ல தாக்கத்தை நிர்ணயிப்பதற்காக ‘வேலைவாய்ப்பு திணைக்கள’த்திற்கு
- சில விசா வகைகளுக்கான அயல்நாட்டு கல்வித் தகுதிகளை மதிப்பீடு செய்ய அமர்த்தப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மற்றும் ‘கல்வி திணைக்கள’த்திற்கு
- ‘வயதுவந்த புலம்பெயர்ந்தோர் ஆங்கிலக் கல்வித் திட்ட’ (Adult Migrant English Program) த்தின் கீழ் ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கும் கல்வி நிறுவனங்களுக்கு
- கல்வி வழங்குநர்களை நெறிப்படுத்தும் நோக்கங்களுக்காக அரச அமைப்புகளுக்கு.


© COMMONWEALTH OF AUSTRALIA, 2020

**உடல்நலம்**

விசா வழங்கப்படுவதற்கான உடல்நலத் தகுதி பூர்த்தி செய்யப்படுகின்றதா, உடல்நலத் தேவைகளுக்கு விலக்கு அளிக்கலாமா என்று தீர்மானிக்க உதவவும், பொது சுகாதாரத்திற்கு எதுவும் ஆபத்து நேரிடும் வாய்ப்பு இருக்கிறதா என்று தீர்மானிக்க உதவவும், உங்களது விசா விண்ணப்பத்திற்காக மதிப்பிடப்பட்ட உங்களுடைய அல்லது உங்களது குடும்பத்தினருடைய உடல்நலம் குறித்த தகவல்கள் அரச முகமைகளுக்கும் மருத்துவ சேவை வழங்குநர்களுக்கும் தெரியப்படுத்தப்படலாம்.

**அகதி மற்றும் மனிதாபிமான அடிப்படை உள்நுழைவு, மற்றும் 'கரையடைவுநிலை பாதுகாப்பு' (On-shore Protection)**

'மனிதாபிமான குடியமரல் சேவைகள்' திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள சேவை வழங்குநர்களுடன் அகதி மற்றும் மனிதாபிமான அடிப்படையில் உள்நுழைவோர் மற்றும் அவர்களை முன்மொழிந்தோர் ஆகியோரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை திணைக்களம் பரிமாறிக் கொள்ளக்கூடும்.

அடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகவும், மனிதாபிமான அடிப்படை சம்பந்தப்பட்ட கோரல்கள் மற்றும் பாதுகாப்புக் கோரல்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் அடைக்கலம் நாடுவோர் மற்றும் பாதுகாப்பு விசா மற்றும் மனிமாபிமான விசா விண்ணப்பதாரிகளைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை 'ஐக்கிய நாடுகள் அகதியர் உயர் ஸ்தானிகர்' (UNHCR) அவர்களுக்கு திணைக்களம் கொடுக்கக் கூடும்.

தமது சேவைகளை வழங்கும் பொருட்டு 'சர்வதேச புலம்பெயர்வு அமைப்' (International Organization for Migration (IOM)) பிற்கும் ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை திணைக்களம் கொடுக்கலாம்.

**தடுப்புக்காவல்**

குடிவரவு தடுப்புக்காவலில் உள்ளவர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை பின்வருவோருக்குத் திணைக்களம் கொடுக்கலாம்:

- மாற்று தடுப்புக்காவல் ஏற்பாடுகள், துணையற்ற வயதுக்குவராத சிறுவர்களுக்கான கவனிப்பு அல்லது உடல்நல மற்றும் மனநல ரீதியான இயலாமையுடைய தடுப்பிலுள்ளவர்களுக்கான பாதுகாவலர் வசதியை ஒழுங்கு செய்யும் பொருட்டு மாநில மற்றும் எல்லைப்பகுதி பொதுநல முகமைகளுக்கு
- இடமாற்றலுக்கு வசதிசெய்து கொடுக்கவும், குடிவரவு நிலையை உறுதிப்படுத்தவும் மாநில மற்றும் எல்லைப்பகுதி 'திருத்து சேவைக' (correctional services) ளுக்கு
- இடமாற்றங்களில் உதவும் பொருட்டு, கரைகடந்த செயலாக்க முறை சேவை வழங்குநர்களுக்கு
- பாடசாலைகள், மருத்துவர்கள் மற்றும் உடல்நலம் மற்றும் பொதுநல சேவை வழங்குநர்கள், அல்லது உங்களுக்கோ அல்லது உங்களது குடும்பத்தினருக்கோ சேவைகள் வழங்கும் அல்லது நீங்கள் புறப்படுவதற்கு உதவி செய்வதற்கான வழிவகைகளை மதிப்பீடு செய்யும் புலப்பெயர்வு அறிவுரையாளர்களுக்கு.

**குழந்தைகளது பொதுநலம் மற்றும் அவர்களுக்கான பாதுகாப்பு**

பின்வரும் காரணங்களுக்காக குழந்தைகள் மற்றும்/அல்லது பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் /குழந்தைகளது பராமரிப்பாளர்கள் ஆகியோரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் குழந்தைகள் பொதுநலம் மற்றும் பாதுகாப்பு முகமைகள், மாநில/எல்லைப்பகுதி சிறுவர் பொதுநல முகமைகள், மாநில/எல்லைப்பகுதி காவல்துறையினர் அல்லது மற்ற பொருந்திவரும் அவுஸ்திரேலிய முகமைகள் ஆகியவற்றிற்குத் தரப்படலாம்:

- குடிவரவுத் தடுப்பு மற்றும் அல்லது சமூகத்தில் பராமரிப்பு மற்றும் பொதுநல ஏற்பாடுகளைச் செய்யவும், கண்காணிக்கவும்
- நிகழச் சாத்தியமான து'ப்பிரயோகம் அல்லது புறக்கணிப்பை விசாரணை செய்ய
- பயண ஏற்பாடுகள் மற்றும் ஆவணப்படுத்தலுக்கு வசதி செய்ய.

தத்தெடுப்பிற்காக அவுஸ்திரேலியாவிற்குள் வரும் குழந்தைகளைப் பற்றிய தகவல்கள் மாநில மற்றும் எல்லைப்பகுதி பொதுநல அமைப்புகள், அவுஸ்திரேலிய 'மத்திய தத்தெடுப்பு அதிகாரங்கள்' (Central Adoption Authorities) மற்றும் 'அவுஸ்திரேலிய பன்னாட்டு தத்தெடுப்பு அமைப்பு' (Intercountry Adoption Australia) ஆகியவற்றிற்கு வெளிப்படுத்தப்படலாம்.

**பயண ஆவணங்களைப் பெறுவதற்கென தூதரகங்கள், உயர் ஸ்தானிகர் பணியகம், உதவித் தூதரலுவலகம் ஆகியவற்றிற்குத் தகவல்கள் தரல்ல்**

நாட்டை விட்டு வெளியேறும் அடிப்படையில் உங்களுக்கு விசா தரப்பட்டாலும், அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து இருப்பதற்கு சட்டப்படியான அடிப்படை எதுவும் உங்களுக்கு இல்லை என்றாலும், வெளியேற வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கப்படுவீர்கள். செல்லுபடியாகும் பயண ஆவணம் உங்களிடம் இல்லை என்றாலும் அல்லது நியாயமான காலத்திற்குள் பயண ஆவணத்தை நீங்கள் பெறவில்லை என்றாலும், பயண ஆவணம் வேண்டி உங்கள் சார்பாக திணைக்களம் விண்ணப்பிப்பது வழமையான செயல்முறையாகும். உங்களது புறப்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய இது வழி செய்யும்.

பயண ஆவணம் ஒன்றைக் கொடுப்பதற்கு, குறிப்பிட்ட தூதரகம், உயர் ஸ்தானிகர் பணியகம் அல்லது உதவித் தூதரகத்தினால் வேண்டப்படும் குறைந்தபட்ச தகவல்களை மட்டுமே திணைக்களம் கொடுக்கும். உங்களது பெயர், உங்களது தற்போதைய கடவுச்சீட்டு அல்லது மற்ற அடையாள ஆவணங்களது விபரங்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் ஆகியன இதில் உள்ளடங்கக் கூடும்.

**பிரசாவுரிமை**

தனிநபர் அடையாளம் காட்டிக' ளுக்கும் மேலாக, ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை திணைக்களம் பின் வருவோருக்குக் கொடுக்கக் கூடும்:

- பிரசாவுரிமை சடங்குகளை ஏற்பாடு செய்து நடத்தும் நோக்கத்திற்காக உள்ளூராட்சி நகரவைகளுக்கும், மற்ற அமைப்புகளுக்கும்
- அவுஸ்திரேலிய விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் கருத்தில் கொள்ளும் பொருட்டு 'கவர்னர்-ஜெனரல்' அவர்களது உத்தியோகபூர்வ செயலர் அலுவலகம், மற்றும் 'பிரதம அமைச்சின் திணைக்களம;', மற்றும் அமைச்சரவை ஆகியவற்றிற்கு
- புது பிரசைகளை அவுஸ்திரேலிய சமூகத்திற்கு வரவேற்பதற்கென பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மற்ற உள்ளூராட்சி நகரவை உறுப்பினர்களுக்கும்.

**புலப்பெயர்வு குறித்த ஆராய்ச்சி**

தற்போதைய மற்றும் முந்தைய சேவைபெறுநர்களைப் பற்றிய ஆய்வுகளுக்காகவும் தனிநபர் ஒருவரைப் பற்றிய தகவல்கள் பாவிக்கப்படலாம். கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்ட உருவாக்கம் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சி, ஆய்வு மற்றும் பகுப்பாய்வு நோக்கங்களை முன்னிட்டு மற்ற முகமைகளுக்கும், ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள மூன்றாம் தரப்பினருக்கும் ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம். இத் தகவல்களை சொல்லப்பட்டுள்ள ஆய்வு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், ஆய்வு முடியும்போது இவை அழிக்கப்படவேண்டும் என்றும் ஒப்பந்தங்கள் வேண்டுகின்றன. வெளியிடப்படுவதற்கு முன்பாக, சேகரிக்கப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள விபரங்களில் இருந்து ஒருவரது தனிப்பட்ட அடையாளம் நீக்கப்பட்டிருக்கும்.

புதிதாய் வந்துள்ளவர்களைப் பற்றிய மக்கள் தொகையியல் ஆராய்ச்சி, மற்றும் பலவகைப்பட்ட புலப்பெயர்வுத் திட்டங்கள் மற்றும் குடியமர்வு விளைபலன்களைப் பற்றிய பகுத்தாய்வு நோக்கங்கள் ஆகியவற்றை முன்னிட்டு ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் 'அவுஸ்திரேல ியா புள்ளியியல் பிரிவு'-க்குக் கொடுக்கப்படக் கூடும்.

குடியமர்வு செயல்பாட்டைத் திட்டமிட, அல்லது குடியமர்வு சேவைகளை வழங்க, மாநில மற்றும் எல்லைப்பகுதி முகமைகளுக்கு அல்லது புலம்பெயர்ந்தோர் சேவை அமைப்புகளுக்கு சமீபத்தில் வந்துள்ளவர்களைப் பற்றிய தகவல்கள் கொடுக்கப்படக் கூடும்.

## பிரதானமான சர்வதேச நிகழ்வுகள்

பெரும் விளையாட்டு நிகழ்ச்சிகள், பன்னாட்டுத் தலைவர்களது சந்திப்புகள், சமூக, கலாசார அல்லது சமய உலகக் கூட்டங்கள் அல்லது விழாக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மாநில மற்றும் எல்லைப்பகுதி முகமைகளை உள்ளடக்கிய அரசாங்க முகமைகளுக்கு ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் கொடுக்கப்படலாம்.

உங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, அவுஸ்திரேலிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கும், மற்ற நாடுகளுக்கும் 'உணர்வுபூர்வமாக முக்கியமல்லாத' (non-sensitive) செய்திகளையும் திணைக்களம் பயன்படுத்த அல்லது வெளிப்படுத்தக்கூடும்.

## திணைக்களத்தினது ‘தகவல் பாதுகாப்பு கொள்கை’ குறித்த விபரம்

**https://www.homeaffairs.gov.au/access-and-accountability/our-commitments/privacy** எனும் திணைக்களத்தினது வலைத்தளப் பக்கத்திலிருந்து திணைக்களத்தினது ‘தகவல் பாதுகாப்புக் கொள்கை’யை நீங்கள் பெறலாம்.

கீழ் வரும் விடயங்களைப் பற்றிய தகவல்கள் இக் கொள்கையில் இடம் பெற்றிருக்கும்:

- திணைக்களத்திடமிருக்கும் உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் எப்படி அடையலாம், மற்றும் அதில் திருத்தம் வேண்டுமென்று எப்படிக் கோரலாம் என்பது பற்றி
- தகவல் பாதுகாப்பு விதிமுறைகள் மீறல் குறித்து நீங்கள் முறைப்பாடு செய்வது எப்படி என்பது குறித்தும், முறைப்பாடுகளைத் திணைக்களம் கையாளும் விதம் குறித்தும்.

## உங்களைப் பற்றிய தகவல்களை வெளிநாட்டில் உள்ளவர்களுக்குக் கொடுத்தல்

தகவல்களைக் கைமாற்றம் செய்துகொள்ளவும், இருப்பில் வைக்கவும், வெளிநாடுகளிலுள்ள சேவைவழங்குநர்கள் உட்பட்ட வெளிப்புற தகவல் தொழில்நுட்ப ஒப்பந்ததாரர்களை திணைக்களம் பயன்படுத்துகிறது.

சில தருணங்களில், ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை ‘வெளிநாட்டுப் பெறுநர்க’(ழளநசளநயள சநஉipநைவெள)ளுக்கும் நாங்கள் வெளிப்படுத்துவோம். பெரும்பாலும், இப்பெறுநர்கள் நீங்கள் வழமையாக வாழும் உங்களது சொந்த நாடாகவோ அல்லது நீங்கள் எந்த நாட்டிலிருந்து புறப்பட்டீர்களோ அந்த நாடாகவோ இருக்கலாம் (இந்த நாடுகளிடமிருந்து பாதுகாப்பு வேண்டும் என்று நீங்கள் கோரிக்கைகள் ஏற்படுத்தியிருந்து அந்தக் கோரிக்கைகளின் மீதான முடிவு எடுக்கப்படுவதற்கு நீங்கள் காத்துக்கொண்டிருந்தால் ஒழிய). நவீன பயணியர் செயல்பாட்டு முறைகள் மற்றும் மின்னாக்க விசா செயல்பாட்டு முறைகள் ஆகியவற்றிற்காக வான்வழிப் போக்குவரத்து நிறுவனங்கள் அல்லது பிரயாண முகவர்களுக்கும் தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதும் இதில் உள்ளடங்கும்.

ஐக்கிய அமெரிக்கா (the U.S), ஐக்கிய இராச்சியம் (the U.K), கனடா மற்றும் நியூ ஸீலந்து ஆகிய நாடுகள் உள்ளடங்க, ஆனால் இவை மட்டுமல்ல, தகவல் பகிர்வு உடன்பாடுகளை அவுஸ்திரேலியாவுடன் மேற்கொண்டுள்ள நாடுகள் அல்லது அமைப்புகளுடனும் திணைக்களம் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும். அங்கஅடையாளங்க(தனிநபர் அடையாளங்காட்டிகள்)ளைப் பகிர்ந்துகொள்வதும் இந்தத் தகவல் பரிமாற்றங்களில் உள்ளடங்கலாம்.

உங்களுடைய ‘தனிநபர் அடையாளம் காட்டிக’ளையொத்த பொருத்தம் எதுவும் இருந்தால், உங்களது வாழ்க்கை சரிதையைப் பற்றிய விபரங்கள், பயண மற்றும் இதர அடையாள ஆவணங்கள் அல்லது அப்படிப்பட்ட ஆவணங்களிலுள்ள தகவல்கள், உங்களது குடிவரவு நிலை மற்றும் குடிவரவு வரலாறு (குடிவரவு குறித்த மோசடி வேலைகள் அல்லது குற்றச்செயல்கள் இதில் உள்ளடங்கக் கூடும்), மற்றும் எவ்வொரு குற்றவியல் வரலாறு குறித்த தகவல்கள் ஆகியவற்றைத் திணைக்களம் வெளியிடலாம்.

உங்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்துவதும், மற்ற முகமைகளுக்கு இதே அடையாளத்தின் கீழ் இதே போன்ற கோரிக்கைகளை நீங்கள் முன்வைத்திருக்கிறீர்களா என்று தீர்மானிப்பதும் இப்படிப்பட்ட தகவல் வெளிப்படுத்தலின் நோக்கமாகும்.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு எதிரான கோரிக்கைகளின் அடிப்படையில், கரைகடந்த மனிதாபிமான விசா அல்லது பாதுகாப்பு விசா விண்ணப்பம் ஒன்றை நீங்கள் முன்வைப்பீர்களாயின், அந்த அரசாங்கத்திற்கு திணைக்களம் உங்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தாது, பின்வருவன இதற்கு விலக்கு:

- நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கிறீர்கள், மற்றும் அந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள், அல்லது திரும்ப சம்மதம் தெரிவித்திருக்கிறீர்கள், அல்லது
- பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய கடப்பாடுகள் அவுஸ்திரேலியாவிற்கு உள்ள ஒரு நபராக நீங்கள் அடையாளம் காணப்படவில்லை.

| | |
|---|---|
| *வலைத்தள முகப்புப்பக்கம* | **www.homeaffairs.gov.au** |
| *பொது விசாரிப்புகள் இணைப்பு* | தொலைபேசி இயக்குநர் ஒருவருடன் கதைக்க **131 881** எனும் இலக்கத்தை அலுவலக நேரங்களில் அழையுங்கள் (இதற்கு அப்பாற்பட்ட நேரங்களில் பதிவுசெய்யப்பட்ட தகவல்கள் கிடைக்கும்). நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்தால், உங்களுக்கு அண்மையிலுள்ள அவுஸ்திரேலிய தூதரலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். |


© COMMONWEALTH OF AUSTRALIA, 2020